# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 1166/2016/ந

ஆணை எண்: 0182/2016

நாள்: 03/12/2016

திரு. டி. சண்முகம்,
எண்.90, வள்ளுவம் வாசுகி தெரு,
விஜிபி நகர் (கிழக்கு) சாலமேடு,
விழுப்புரம் - 605 401.

மனுதாரர்

திரு. க. மணிவண்ணன்,
முன்னாள் பொதுப்பணி மேற்பார்வையாளர்,
சிதம்பரம் நகராட்சி தற்போதைய
நகராட்சி பொறியாளர்,
ஆற்காடு நகராட்சி, வேலூர் மாவட்டம்.

எதிர்மனுதாரர்

## ஆணை:

மனுதாரரது 16.11.2016 நாளிட்ட முறையீட்டு மனு 18.11.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டு எண்.1166/16 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி மனுவில் சிதம்பரம் நகராட்சியில் நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் கட்டும் பணி செய்தமைக்காக வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.28,000/- முன்னாள் சிதம்பரம் நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளரும் தற்போது ஆற்காடு நகராட்சி பொறியாளராக பணிபுரிபவருமான திரு. க. மணிவண்ணன் என்பவரால் ஒப்பந்ததாரர் திரு. சச்சிதானந்தம் என்பவருக்கு வழங்கப்படவில்லை என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிதம்பரம் நகராட்சியின் கீழ்க்காணும் கடிதங்கள் ஆதாரங்களாக இணைக்கப்பட்டுள்ளன.

1. ந.க. எண்: இ1/9069/97-1 நாள்: 06.02.1998
2. ந.க. எண்.இ1/9096/97-2 நாள்:06.02.1998
   (ந.நி.ம.இ.க்கு முகவரியிட்டது)
3. (ந.க.எண்: 3823/15/இ1 நாள்:03.11.2015

மேலும் செங்கற்பட்டு மண்டல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக கடிதம் ந.க.எண்: 4907/15/பி1, நாள்:22.01.2016ம் இணைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள பணி 10.06.1996ல் முடிக்கப்பட்டுள்ளது. 2014-ஆம் ஆண்டு தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறை மன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (c)ன் -படி முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் தொடர்பான பொருட்பாடுகளில் முறைமன்ற நடுவர் விசாரணை செய்தல் கூடாது. எனவே இம் முறையீடு இம்முறை மன்ற நடுவ விசாரணைக்கு உகந்ததல்ல என தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

இருப்பினும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மேற்படி ஆதாரங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் தக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சிதம்பரம் நகராட்சி ஆணையர் மற்றும் செங்கற்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2016-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 03-ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்

1. திரு. டி. சண்முகம்,
   எண்.90, வள்ளுவம் வாசுகி தெரு,
   விஜிபி நகர் (கிழக்கு) சாலமேடு,
   விழுப்புரம் - 605 401.
2. திரு.க. மணிவண்ணன்,
   நகராட்சிப் பொறியாளர், ஆற்காடு நகராட்சி,
   வேலூர் மாவட்டம் -632 503.
3. நகராட்சி ஆணையர், சிதம்பரம் நகராட்சி,
   கடலூர் மாவட்டம் - 608 001.
4. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   செங்கல்பட்டு மண்டலம், தாம்பரம்.

நகல்:

நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
எழிலகம், சேப்பாக்கம்,
சென்னை – 600 005.